DINAMALAR

PAGE NO: 03 DATE: 25.07.2023

# பல்கலைக்கழக சர்வதேச மாநாட்டில் சோழர்களின் பெருமைகள் நினைவு கூறல்

**புதுச்சேரி, ஜூலை 25–**

புதுச்சேரி பல்கலைக் கழகம் சார்பில் நடந்த சர்வதேச மாநாட்டில், சோழர்களின் பெருமைகள் நினைவு கூறப்பட்டது.

புதுச்சேரி பல்கலைக் கழகம், இந்து சமுத்திர மண்டல அமைப்பு சார்பில் 'அழியா சகோதரத் துவத்தின் நினைவுகள்– சோழர்களின் கலாசார உலகம்' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு, ஓட்டல் அக்கார்டில் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக் கழக துணைவேந்தர் குர் மீத் சிங் தலைமை தாங்கி னார்.

டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக துணைவேந்தர் ஷாந்திஸ்ரீ துளிப்புடி பண்டிட் நோக் கவுரையாற்றினார்.

ஆர்.எஸ்.எஸ்., தேசிய செயற்குழு உறுப்பினர் மன்னனேய இந்திரேஷ்கு மார் சிறப்புரையாற்றினார்.




■ புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமையில் ஓட்டல் அக்கார்டில் 'சோழர்களின் கலாசார உலகம்' என்ற தலைப்பில் சர்வதேச மாநாடு நடந்தது.

செல்வகணபதி எம்.பி., வாழ்த்தி பேசினார்.

மாநாட்டில் சோழர்கள், பண்டைய இந்தியா – சீனாவின் மறக்கப்பட்ட, அறியப்படாத வரலாறு, இந்தியா – தென்கிழக்கு ஆசியா இடையிலான வர்த் தக தொடர்புகள் நினைவு கூறப்பட்டது.

தொடர்ந்து புதுச்சேரி பல்கலைக்கழக நுண்கலை துறை மாணவர்களின் களரி, இசை, தெருக்கூத்து நிகழ்ச்சிகள் நடந்தது. நிகழ்ச்சியை பேராசிரியர் நந்தகிஷோர் தொகுத்து வழங்கினார்.

சீனிவாஸ்ராவ் நன்றி கூறினார்.

DINAKARAN

PAGE NO: 16

DATE : 25.07.2023

புதுவை பல்கலைக்கழகம் சார்பில்

# சோழர்களின் கலாச்சார மாநாடு




புதுச்சேரி, ஜூலை 25: புதுவை பல்கலைக்கழகத்துடன், இந்து சமுத்திர மண்டல அமைப்பு இணைந்து சோழர்களின் கலாச்சாரம் குறித்த மாநாடு நடந்தது. இதில் இந்திய கலாச்சாரத்தில் சோழர் கலாச்சாரம், கட்டிடக்கலை, அவர்களின் கடல் வரலாறு மற்றும் அரசியல் கலாச்சாரம் குறித்து இணைப் பேராசிரியர் நந்தகிஷோர், அறிஞர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் விளக்கினர்.

சிறப்பு விருந்தினராக செல்வகணபதி எம்பி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் குர்மீத் சிங் மற்றும் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ஷாந்திஸ்ரீ துளிப்புடி பண்டிட், ஆர்எஸ்எஸ் தேசிய செயற்குழு உறுப்பினர் மன்னனேய இந்திரேஷ் குமார் ஆகியோர் தொடக்கவுரை ஆற்றினார். அப்போது சோழர்கள் மற்றும் பண்டைய இந்தியா - சீனாவின் மறைக்கப்பட்ட அல்லது அறியப்படாத வரலாறு, இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசியா இடையேயான வர்த்தக தொடர்புகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்து சமுத்திர மண்டல அமைப்பு பொதுச்செயலாளர் ஸ்ரீனிவாஸ்ராவ் நன்றி கூறினார். இதனை தொடர்ந்து புதுவை பல்கலைக்கழக கலைத்துறை மாணவர்களின் நடனம், இசை, தெருக்கூத்து என பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகள் நடந்தன.

DINAMALAR

PAGE NO: 02 DATE: 25.07.2023



# முதுநிலை படிப்புக்கு விண்ணப்பிக்க புதுச்சேரி பல்கலைக்கழகம் அறிவிப்பு

**புதுச்சேரி, ஜூலை 25–**

புதுச்சேரி பல்கலையில் முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பல்கலைக் கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

பல்கலை கழகங்களில் முதுநிலை படிப்பிற்கு சேர்வதற்கான 'கியூட்' நுழைவுத் தேர்வு கடந்த ஜூன் 5 மற்றும் 6ம் தேதிகளில் நடந்தது. அதன் முடிவுகளை தேசிய தேர்வு முகமை தற்போது வெளியிட்டுள்ளது.

அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் புதுச்சேரி பல்கலையில் உள்ள முதுநிலை பட்டம் மற்றும் பட்டய படிப்புளின் சேர விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பம் https://www.pondiuni.edu.in/admissions-2023-24/ என்ற இணைய முகவரியில் கிடைக்கும். மேலும் தகவல் குறிப்பேட்டையும் டவுன்லோடு செய்து கொள்ளலாம். விண்ணப்பங்களை இம்மாதம் 31ம் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

MALAI MALAR

PAGE NO : 03

DATE : 25.07.2023

### புதுவை பல்கலையில்

# முதுநிலை படிப்புக்கு விண்ணப்பம்

புதுச்சேரி, ஜூலை 25—

புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

பல்கலை கழகங்களில் முதுநிலை படிப்பிற்கு சேர்வதற்கான 'கியூட்' நுழைவுத் தேர்வு கடந்த ஜூன் 5 மற்றும் 6—ம் தேதிகளில் நடந்தது. அதன் முடிவுகளை தேசிய தேர்வு முகமை தற்போது வெளியிட்டுள்ளது. அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் புதுவை ப்பல்கலையில் உள்ள முதுநிலை பட்டம் மற்றும் பட்டய படிப்புளில் சேர விண்ணப்பிக்கலாம்.

### விண்ணப்பம்

இதற்கான விண்ணப்பம் பல்கலைக்கழக இணைய முகவரியில் கிடைக்கும். மேலும் தகவல் குறிப்பேட்டை யும் டவுன்லோடு செய்து கொள்ள லாம். விண்ண ப்பங்களை வரும் 31—ந் தேதி மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.